21 அக்டோபர் 2021

அன்பார்ந்த குடியிருப்பாளர்களே

**இல்ல மேம்பாட்டுத் திட்டத்தின் தளவமைப்புக் கண்காட்சியைப் பார்வையிடல்**
**புளோக் 1 முதல் 19, டோ யீ டிரைவ்**

டோ யீ டிரைவ் இல்ல மேம்பாட்டுத் திட்டத்திற்காக (ஹெச்ஐபி திட்டம்) 16 ஜூலை 2021 தேதியிட்ட ஆய்வில் நீங்கள் பங்கெடுத்தீர்கள்.

2 ஹெச்ஐபி திட்டத்தின் மேம்பாட்டுப் பணிகளை நீங்கள் மேலும் புரிந்துகொள்ள உதவியாக, பணிகளை விளக்கமாக எடுத்துக்காட்டும் தளவமைப்புக் கண்காட்சிக்கு நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்தக் கண்காட்சி இப்போது பார்வையிடலுக்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். கண்காட்சியில் பின்வரும் மேம்பாடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்:

i. <u>அத்தியாவசிய மேம்பாடுகள்:</u>
- கான்கிரீட் உதிர்வு/கட்டமைப்பு விரிசல்கள் பழுதுபார்ப்பு
- UPVC கழிவுக் குழாய்கள்
- புதிய துணி உலர்த்தும் அடுக்கு

ii. <u>விருப்பத்திற்குட்பட்ட மேம்பாடுகள்:</u>
- 3 வண்ணத் தொகுப்புகளில் கழிவறை/குளியலறை மேம்பாடு
- கம்பிக் கதவு
- வாசல் கதவு
- குப்பைக்குழி மூடி

iii. <u>சுறுசுறுப்பான மூத்தோருக்கான (ஈஸ்) மேம்பாடுகள்:</u>
- கைப்பிடிகள்
- தரைக் கற்களில் வழுக்கல் தடுப்பு இரசாயனம் பூசுதல்
- சாய்வுப்பாதைகள்

3 கண்காட்சியைப் பின்வரும் தேதிகளிலும் நேரங்களிலும் பின்வரும் இடத்தில் பார்வையிடலாம்:

இடம் : டோ யீ டிரைவ், புளோக் 5 கீழ்த்தளம்

தேதி : 3 நவம்பர் 2021 (புதன்) முதல் 30 நவம்பர் 2021 (செவ்வாய்) வரை

நேரம் : காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரை (வாரநாட்கள்);
காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை (வார இறுதி, பொது விடுமுறை நாட்கள்)
காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை (26 முதல் 30 நவம்பர்)

4 நீங்கள் கண்காட்சியைப் பார்வையிட விரும்பினால், கீழ்க்காணும் QR குறியீட்டின் வாயிலாகத் தேதி பதிவுசெய்ய வேண்டும். உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், ஹெச்ஜபி தகவல் நிலையத்தின் **1800-206-6642** கட்டணமில்லா தொலைபேசி எண்ணை அழையுங்கள் அல்லது G29i.tohyi@wingtuck.com.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உள்ளே நுழைவதற்குமுன் தேதிப் பதிவை உறுதிப்படுத்தும் மின்னஞ்சலை நீங்கள் காட்டவேண்டும். ஒவ்வொரு பார்வையிடலுக்கும் ஒவ்வொரு வீட்டிலிருந்து அதிகபட்சம் 2 பேர் வரை மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

https://go.gov.sg/exhibitiong29i-pb

5 மாறாக, பின்வரும் இணைப்பின்வழி நுண் இணையத்தளத்திற்கு நீங்கள் செல்லலாம்:

https://www.btcares.sg/tyhip

6 நன்றி.

உங்கள் உண்மையுள்ள

கிளமென்டி கிளை
வீடமைப்பு நிர்வாகக் குழு
வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்